# நாணயம் செய்திமடல்

[ உள் சுற்றுக்கு மட்டும் ]

மலர் 1 இதழ் - 4

## அரசியல் மற்றும் சமயம் சாரா
## கிராமிய வளர்ச்சிப் பணித் தகவல் மடல்

[ தை பிறந்தால் வழி பிறக்கும் - பெண்களால் ]

ஆசிரியர் : திருமிகு. பொற்கொடி
ஆசிரியர் குழு உறுப்பினர்கள் : திருமிகு. எர்ஸ்கின், திருமிகு. சந்தனமாரி, திருமிகு.ராஜேஸ்வரி, திருமிகு. நிர்மல்

அன்பான சகோதரிகளே,

வணக்கம். கொஞ்ச நாள் கழிச்சு உங்களோட தொடர்பு கொள்றதல மகிழ்ச்சி. ஒரு சில தவிர்க்க முடியாத சூழல்களால் எதிர்பார்த்தபடி செய்திமடலை வெளியிட முடியல. மன்னிச்சுக்கோங்க. எப்படி மழையெல்லாம் ? விவசாயம் நல்லா இருக்குதுன்னு ஆசிரியர் குழு உறுப்பினர்களிடமிருந்து கேள்விப்பட்டேன். சந்தோஷம். அதான் விவசாயத்தில் பெண்கள் என்ற தலைப்புகளில் கட்டுரைகளை நமது தோழியர்கள் எழுதியுள்ளார்கள். என்ன தை பிறந்தது வழி பிறந்த மாதிரி இருக்கா ? தெம்பை கொடுத்ததா ஆம் தை பிறந்தால் வழி பிறக்குமென்று கூறுவார்கள். வழி பிறப்பதுஎன்பது முக்கியமாக நிலம், விவசாயம், அறுவடை, சேமிப்பு, சொத்துக்கள் வாங்குதல் போன்ற வாழ்வின் உயர்வுக்கு அடிப்படையாய், அடியாளங்களாய் விளங்கக்கூடியவை. அக்காலத்தில் " நிலமே சொத்து விவசாயமே பிரதானம் " என்றிருந்து வாழ்க்கைநிலைஉயர்வுக்கு வழிகாட்டியாய் இருந்தது. அதைத்தான்

" உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் - மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர் "

என பொய்யாமொழி புலவர் திருவள்ளுவர். உழவர்களை தெய்வங்களாக உருவகப்படுத்தி தம் நூலில் எழுதியுள்ளார்.

உழவுத்தொழில் 60% வேலைகள் பெண்களால் செய்யப்படுகின்றது என்பது நான் சொல்லி நீங்கள் தெரிந்துகொள்ள அவசியமில்லை. ஆனால் அங்கீகாரம் மட்டும் கிடைக்கவில்லை என்பதை மட்டும் அழுத்தந்திருத்தமாக கூற விளைகின்றேன்.

" யாரோ விதைச்சு யாரோ அறுத்து
எங்கேயோ போகுதடி நீயும் சிந்திச்சு பார்த்தாயடி
வயக்காரனெல்லாம் வாழுறான் வாழுறான்,
நட்டவள் அறுத்தவள் காயிறாள் காயிறாள் "

சிந்திச்சு பாருங்கள் சகோதரிகளே

" ஒன்றுபடுங்கள் ஓங்கி உயர்த்துங்கள்
உரிமைக்குரலை
ஓய வேண்டாம் ஓர் ( புதிய ) விடிவை காணும் வரை "

என வாழ்த்தி விடை பெறுகின்றேன். உங்களின் அன்பான விமர்சனங்களை நம் செய்திமடல் கௌரவ ஆலோசகர்கள் முனைவர். கண்ணன், இயக்குனர் கல்வி பணியாளர் மேம்பாட்டு கல்லூரி, காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, அவர்களுக்கு தெரியபடுத்துங்கள்.

நட்புறவுடன்
த. பொற்கொடி
ஆசிரியர்

## தைபிறந்தால் வழிபிறக்கும் தங்கமே தங்கம்

பொங்கல் விழா இந்தியாவின் தென்பகுதியில் உள்ள தமிழ்நாட்டின் பாரம்பர்ய விழா. இவ்விழா திராவிடர்களின் அறுவடைத்திருநாளாக கொண்டாடப்படுகின்றது.

சங்க காலத்தில் தைஉன் மற்றும் தைநிரடல் என்ற திருவிழாக்கள் தைமாதம் கொண்டாடப்பட்டதாகவும் இவை மருவி தைப்பொங்கலாக கொண்டாடப்பட்டு வருவதாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

தைத் திருவிழாவின் முக்கிய சிறப்பம்சம் பெண்கள் மார்கழி மாதம் முழுவதும் பாவை நோன்பு என்னும் விரதம் மார்கழி மாதத்தில் கொண்டாடப்பட்டு தை முதல் நாள் முடித்து கொள்வதால் நோன்பு முடிக்கும் நாளை பொங்கலிட்டு கொண்டாடப்படுவதாக கூறப்படுகின்றது. இந்த நோன்பு நாட்களில் பெண்கள் பால் மற்றும் பால் சார்ந்த உணவுகளை தவிர்த்து மழைப்பேறு மற்றும் நல்ல விளைச்சல் எடுக்கவும் குடும்ப சுபிட்சமாக நடைபெற வேண்டும் என்பதற்காகவும் தங்களது உடலை வருத்திக்கொண்டு கடவுளை வணங்குவதாக சொல்லப்படுகின்றது.

தைத்திருநாளை கொண்டாட பெண்கள் முக்கியமாக வீட்டில் இருந்த பழைய மண் பாத்திரங்கள் துணிமணிகள் இவைகளை வெளியேற்றி வீடுகளை மண்போட்டு சாணமிட்டு மெழுகி மற்றும் வெள்ளையடித்து, பலவர்ணங்களை தீட்டி மாக்கோலம் இட்டு வீட்டை அலங்கரிக்கின்றனர். இதை போகிப்பொங்கல் என்று அழைக்கப்படுகின்றது.

பொங்கலன்று காலை கன்னிப்பிள்ளை மற்றும் கம்பங்கதிர், வேப்பிலை இவைகளை இணைத்து வீட்டின் முன்புறம் வைப்பதன் மூலம் வீடு, பிணி, பீடை போன்றவற்றிலிருந்து காப்பாற்றப்படுவதாக சொல்லப்படுகின்றது.

தைப்பொங்கலன்று வீட்டு வாசலில் கோலமிட்டு அன்று பூத்த பூசணி மலரை கோலத்தின் நடுவில் வைத்து, அறுவடை செய்த நெல்லை அரிசியாக்கி பொங்கல் இடப்படுகிறது. பொங்கல் பொங்கி வரும்பொழுது "பொங்கலோ பொங்கல்" என்று குலவையிட்டு மகிழ்கின்றனர். இந்த பொங்கல் கண்ணிப்பொங்கல் என்று சொல்லப்படுகின்றது. இந்தப் பொங்கல் நல்ல மழையைக் கொடுத்து வருணபகவானுக்கு நன்றி சொல்வதாக கூறப்படுகிறது.

மாட்டுப்பொங்கலன்று நெல்மணிகள் வீட்டிற்கு வர மிகவும் முக்கிய காரணமாயிருந்த மாடுகளை மகிழ்விக்கும் வகையிலும் கடவுளின் அவதாரமாக அவைகளுக்கு மரியாதை செலுத்த மஞ்சள் குங்குமம் இட்டு, கொம்புகளுக்கு, வர்ணம் பூசி, பின்பு பொங்கலிட்டு மாடுகளை வழிபடுகின்றனர்.

மேற்கண்ட பொங்கல் திருநாளை கொண்டாடுவதில் முக்கிய பங்கு பெண்களை சார்ந்ததாக உள்ளது. வீடு சுத்தம் செய்தல். விருந்தினர் உபசரிப்பு குழந்தைகளுக்கு புதிய உடை தைத்தல், உணவு தயாரித்தல் போன்ற அனைத்து வேலைகளையும் செய்து கணவர் குழந்தைகளுக்கு வாழை இலையில் உணவுபரிமாறி அவர்களையும் மகிழ்விக்கும் பெண்கள் சங்ககாலத்தில் இருந்து நவீன காலம் வரை வீட்டின் முன்னேற்றம் மற்றும் பண்பாடுகளை காப்பாற்றுகின்றனர், என்பதை ஆட்சேபிக்க முடியாது என்பது அனைவரும் அறிந்ததே, ஆனால் இன்றைய காலக்கட்டத்தில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. பொங்கல் திருநாளில் பொங்கலிடுவதைக்கூட கேஸ் அடுப்பில் வைத்து விருந்தினர்கள், மற்றும் அண்டை வீட்டார்களை அழைக்காமல் தமது வீடுகளிலேயே சந்தோஷத்தை பகிர்ந்து கொள்கின்றனர்.

அன்பான வாசகர்களே பெண்களின் பெருமை பொங்கலிலும் உள்ளது என்பதை பெருமிதத்துடன் பகிர்வதில் மகிழ்வடைகின்றேன்.

" பெண்களில்லாமல் பொங்கலில்லை
பொங்கலில்லாமல் தையில்லை
தையில்லாமல் வழியுமில்லை "
வழிபிறந்துவிட்டது பெண்களினால்
பாரையே மாற்றுவோம் பாரதி கனவு போல்"

அன்புச் சகோதரி
சந்தனமாரி

## நாணயக்குழுக்கள் சந்தித்த சவால்கள்

நாணயக்குழு உறுப்பினர்கள் விதிமுறைகள் மற்றும் கொள்கை தெளிவு இல்லாமல் இருப்பதால், தாமதமாக கடன் செலுத்துகின்றனர். இதனால் குறிப்பிட்ட தேதிகளில் கூட்டம் நடைபெறுவது இல்லை. இதனால் மற்ற உறுப்பினர்கள் கூட்டங்களில் கலந்து கொள்வதை தவிர்ப்பது போன்ற பிரச்சனைகள் ஏறபடுகின்றன. அதிருப்தியாக இருப்பது மேலும் பிரதிநிதிகளே குழு பணத்தை தவறாக பயன்படுத்துவது, மூலம் குறிப்பிட்ட நேரத்தில் வங்கிக் கடன் தாமதமாகிவிடுகின்றது. [பிரதிநிதிகள் குறிப்பிட்ட காலத்தில் வங்கி தவணை தொகையை வங்கியில் செலுத்தாமல் பிற நபர்களுக்கு கைமாற்றுகடனாக கொடுத்தல்.] உறுப்பினர்கள் மாற்று பெயர்களில் கடன் எடுப்பதால், ஒரே நபரிடம் அதிகமான பணம் தேங்கி கடன் சுமை கூடுகின்றது. இதனால் சம்பந்தப்பட்ட நபர்கள் குழுவில் ஈடுபாடு காட்டாமல் நின்று விடுகின்றனர். குடும்பம் மற்றும் கிராம பிரச்சனைகள் காரணமாக குழுக்களில் பிளவுகள் ஏற்படுதல். எழுதப்படிக்க தெரியாத பிரதிநிதிகள் உள்ள குழுக்கள் பணியாளர்களையே நம்பி இருக்கின்றனர். பிரதிநிதிகள் சுய லாபத்துக்கு குழுக்களை பயன்படுத்துகின்றனர்.

[ நன்கொடை, பிற தொண்டு நிறுவனங்கள், கட்சிரீதியாக மாற்றுதல், காப்பீட்டு திட்டங்களில் ஈடுபடுத்துதல் ] இது போன்ற பிரச்சனைகள் குழுக்களில் இருப்பதால், பணியாளர்கள் மூலம் தனிநபர் சந்திப்பு, குழுசந்திப்பு, மூலம் குழுக்களின் விதிமுறைகள் பற்றி தெளிவு கொடுக்கப்படுகின்றது. மாதம் ஒரு முறை வரவு-செலவு அறிக்கைகளை சரிபார்ப்பதின் மூலம் பிரச்சனைகளை கண்டறிந்து பிரச்சனைக்குரிய நபர்களை சந்தித்து தீர்வு காணப்படுகின்றது. சுழற்சி முறையில் உறுப்பினர்கள் வங்கிக்கு செல்வதின் மூலம் அனைவரும் வங்கி நடைமுறைகளை அறிந்து கொள்ள செய்யப்படுகின்றது. உறுப்பினர்களுக்கு நிர்வாகப்பயிற்சி, [ஷிபிநி,கிஸி] தலைமைத்துவ பயிற்சி மற்றும் பாலியல் சமன் பயிற்சி கொடுக்கப்படுவதால் குழுவை நன்றாக நிர்வாகம் செய்யவும், உறுப்பினர்களின் பரஸ்பர உறவு, பகிர்வு, மற்றும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை மேம்படுத்தி பொருளாதாரத்தில் சுயசார்படையச்செய்யப்படுகின்றது.

அன்புடன்
க்ஷி. முருகேஸ்வரி

## திருச்சுழி பகுதியில் உள்ள சிறப்பம்சம்

- ரமண மகரிஷி பிறப்பிடம்

- ☐ தெற்கு வடக்காக செல்லும் புனிதமான [ குண்டாறு ]
- ☐ பிரபல்யமான சிவஸ்தலங்களில் ஒன்று [ பூமிநாதன் கோவில் ]
- ☐ எலும்பு முறிவு சிகிச்சை [ கோனப்பனேந்தல் கிராமம் ]
- ☐ கூட்டு குடும்பம் - கத்தாளம்பட்டி - நான்கு தலைமுறை, 65 நபர்கள்

➢ கால்நடை வளர்ப்பு - வேடநத்தம், ஒரு குடும்பம், குறைந்த எண்ணிக்கை 5 கால்நடைகள்

- ☐ கல்குவாரி, ஆலடிப்பட்டி
- ☐ இயற்கை உரம் விவசாயம் [ திருமலைபுரம் ] மாதிரி பண்ணைகள்
- ☐ பருத்தி விதை தயாரிப்பு - செல்லையாபுரம்
- ☐ கருவேலை கூடை தயாரிப்பு - பாறைக்குளம்
- ☐ கால்நடை வைத்தியர் - கரிசல்குளம் கருப்பையா
- ☐ பல்வலி வைத்தியம் - செங்கமடம்
- ☐ முறம், பெட்டி, தயாரிப்பு - பள்ளிமடம்
- ☐ நொங்கு விளைச்சல் - கடம்பங்குளம்
- ☐ பெண் தயிர் வியாபாரி - புளியங்குளம்
- ☐ ஜல்லிக்கட்டு - செம்பொன் நெருஞ்சி
- ☐ மேளம் - கல்லூரணி
- ☐ மூலிகைகள் - கீவா நல்லி, அம்மன்பச்சரிசி, துளசி ]
- ☐ இயற்கை உரம் - ஆவாரம்பூ, கொழுஞ்சி, மஞ்சணத்தி

தயாரிப்பு
ஷி. சாலைமதலை

## நிகழ்வாய்வறிக்கை

என் பெயர் மலர்விழி. திருச்சுழி பகுதியிலிருந்து சுமார் 15 கி.மீ தொலைவில் எனது கிராமம் உள்ளது எனது தகப்பனார் ஒரு விவசாயக்கூலி எனது குடும்ப வறுமையின் காரணமாக நான் 17 வயதில் கோயம்பத்தூரில் உள்ள மில்லில் குத்தகை தொழிலாளராக வேலைக்கு சேர்ந்தேன். மூன்று வருடம் பணி செய்த பணம் ரூ 30,000/- ஐ வைத்து என் அம்மா எனக்கு 10 பவுன் நகை வாங்கினார். இந்த நேரத்தில் எனது தாய்மாமனார் அவரது மகனுக்கு என்னை திருமணம் செய்து கொள்வதாக, என் பெற்றோரிடம் கேட்டார். எங்கள் இருவரின் சம்மதத்துடன் திருமணம் நடந்தது. பின்பு என் கணவரும் தனிக்குடித்தனம் சென்றோம். என் கணவர் என்னை தினமும் அடிப்பார். பக்கத்து வீட்டு பையனிடம் தொடர்புபடுத்தி பேசுவார். எனது 10 பவுன் நகைகளையும் வாங்கிக்கொண்டார். இந்த நேரத்தில் நான கருவுற்றிருந்தேன். அந்த கருவை கலைக்கச்சொல்லி தினமும் அடிப்பார். நான் மறுத்த பொழுது எனது மாமியார் என் கண்வர் இருவரும் என்னை கட்டாயப்படுத்தி மருத்துவமனைக்கு அழைத்து சென்று கருவை கலைத்தனர். நான் அதன்பின் என் தாய் வீடு வந்து தகவலைக்கூறினேன். என் அம்மா ஸ்பீச் பெண்கள் கூட்டமைப்பை அணுகி என்

நிலையை கூறினார். கூட்டமைப்பின் உதவியோடு மகளிர் காவல் நிலையம் சென்றோம். அங்கே என் கணவரை அழைத்து விசாரித்த பொழுது அவர் என்னுடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்று கூறினார். அதனால் என் உடமைகள் 10 பவுன் நகைகள் , ரூ 10,000/- திரும்ப கொடுக்க சொல்லி காவல் நிலையத்தில் உத்தரவிட்டனர். என் நகைகளை மட்டும் கொடுத்து விட்டு பணத்தை 6 மாதம் கழித்து கொடுப்பதாகவும் கூறினார். காவல் நிலையத்தில் வரதட்சணை பணம் ரூ 10,000/- ஐ 6 மாதத்திற்குள் என் கணவர் என்னிடம் கொடுக்க வேண்டும் என்றும் அதற்குள் நாங்கள் ஒப்புக்கொண்டால் இணைந்து வாழலாம் என்றும் வாக்குமூலம் எழுதி வாங்கியிருந்தனர். அதன் பின் நான் என் பெற்றோருடன் இருந்தேன். 6 மாதத்திற்கு பின் நாங்கள் ரூ 10,000/-ஐ கேட்ட போழ்து என்னுடன் இணைந்து வழ்வதாக கூறினார். அதன் பின் எனது பெற்றோர் என் கணவரின் தாயார் எங்கள் கிராமத்து பஞ்சாயத்து தலைவர் மற்றும் பெண்கள் கூட்டமைப்பு நிர்வாகிகள், அனைவரும் சேர்ந்து ஸ்பீச் ஆலோசனை மையத்தில் வைத்து ஒப்பந்தப்பத்திரம் எழுதி கொடுத்துவிட்டு மீண்டும் வாழ்க்கையை துவங்கினோம் ஆனால் என் கணவரிடம் எந்த மாற்றமுல் இல்லை மறுபடியும் தினமும் அடிப்பார் நகைகளை கேட்பார். நான் மறுபடியும் காவல் நிலையம் சென்றேன். அங்கே அவர் என்னை வேண்டாம் என்றும் ரூ 10,000/- ஐ பெற்றுக்கொண்டு எனது பெற்றோருடன் வாழ்ந்தேன். "ஸ்பீச் - ஆலோசனை மையம்" எனக்கு தொழில் செய்ய ஆலோசனை வழங்கியது. கடனுதவியும் அளித்தது அதை வைத்து தையல் மிஷின் வாங்கினேன். ஒரு நாளுக்கு ரூ 100/- முதல் ரூ 150/- வரை சம்பாதித்தேன். எனது பெற்றோர் எனக்கு மறுமணம் செய்ய மாப்பிள்ளை பார்த்தனர். சமூகம் என் மறுமணத்தை ஏற்றுக்கொள்ளுமா என்ற கேள்விக்குறியுடன் நான் திருமணத்தை தவிர்த்தேன். என் பெற்றோர் என்னை ஸ்பீச் ஆலோசனை மையத்திற்கு அழைத்து சென்றனர். ஆலோசனை மையத்தில் ஆற்றுப்படுத்துனர் என் பிரச்சனையை முழுமையாக கேட்டு என் குழப்ப நிலையை மாற்றினார். எனக்கு வாழ்க்கை துணை தேவை என்ற அவசியம் உணர்த்தப்பட்டதின்பின் திருமணத்திற்கு சம்மதித்தேன். பெண்களின் மன அழுத்தத்தை குறைத்து வாழ்க்கைக்கு தேவையான நல்ல முடிவுகளை எடுக்க "ஸ்பீச் ஆலோசனை மையம்" செயல்படுவதை பெண்களுக்கு கிடைத்துள்ள வரப்பிரசாதமாக கருதினேன். கடந்த இரண்டு மாதத்திற்கு முன் எனக்கு திருமணம் நடந்தது. என் கணவருடன் இப்பொழுது சந்தோஷமாக உள்ளேன்.

சகோதரிகளே நான் சந்தித்த இன்னல்கள் இதைப்படிக்கும் யாருக்கும் இருக்கலாம். பிரச்சனைகளை அடக்கி மனச்சுமையை கூட்ட வேண்டாம். அணுகுங்கள் ஆலோசனை மையத்தை அமைதி பெற.

அன்புடன்
மலர்விழி

பெண்கள் வன்முறைக்கு செல்லும் தொடர்பு நிலையங்கள்

1. ஸ்பீச் பெண்கள் ஆலோசனை மையம் - திருச்சுழி

2. ஸ்பீச் பெண்கள் கூட்டமைப்புகள் & தொலைபேசி எண்கள்

- ☐ திருச்சுழி : 04566 282360
- ☐ ரெட்டியாப்பட்டி : 04566 284637
- ☐ ஆலங்குளம், : 04562 271944
- ☐ சிவகாசி : 04562 221401

3. தென்மண்டல குழந்தை உரிமை பாதுகாப்பு அறக்கட்டளை
சிவகாசி - 4562221601

4. அனைத்து மகளிர் காவல்நிலையம் - அருப்புகோட்டை - 225000
விருதுநகர். - 252312

5. ஷி.றி அலுவலகம்
விருதுநகர் - 220290

6. பெண்கள் ஆலோசனை மையம்
இடம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் - 252701

7. குடும்ப நல நீதிமன்றம் - அருப்புகோட்டை

8. பொது காவல்நிலையம் - திருச்சுழி - 282283
ரெட்டியாப்பட்டி - 284222

9. சமூக நலத்துறை அலுவலகம்
விருதுநகர் - 252701

10. இலவச சட்ட உதவி மையம்

11. ஜனநாயக மாதர் சங்கம்
சென்னை - 9444948818

12. தேசிய மகளிர் ஆனையம்
சென்னை - 04422200375

13. பெண்கள் இணைப்புக்குழு
சென்னை - 25502881

14. ஸ்பீச் சட்ட ஆலோசகர்கள் : திருமிகு. ஹெப்சிபா, திருமிகு. ரமணி

15. குடும்ப ஆலோசகர் : திருமிகு. ஜேனட் சங்கர்

தயாரிப்பு
ஸி. சுந்தரி

**இயந்திர மயமாக்குதலில் பெண்களுக்கு ஏற்பட்டுள்ள வேலைபாதிப்பு**

இந்தியாவின் முதுகெலும்பு கிராமங்கள், அந்த கிராமங்களின் முதுகெலும்பு விவசாயமாகும். விவசாய தொழிலில் 75% வேலைகளை பெண்கள்தான் செய்து கொண்டு இருக்கிறார்கள். நாற்றாங்கல் தயார் செய்தல், நாற்று எடுத்தல், நடுதல், களையெடுத்தல், அறுவடை செய்தல், களம் சுத்தப்படுத்துதல், கட்டு கட்டி களம் சேர்த்தல், தூத்துதல், புடைத்து சுத்தம் செய்தல், கோணியில் நிரப்புதல், வைக்கோலை காய் வைத்து, கட்டுக்கட்டி சேகரித்து வைத்தல் வரை பெண்களின் பங்கு முழுவதுமாக உள்ளது. ஆனால் இன்று விஞ்ஞான வளர்ச்சியின் [ பசுமை புரட்சி ] அரிய, புதிய கண்டுபிடிப்புகளால் விவசாயத்தில் இயந்திரங்களின் ஆதிக்கம் மேலோங்கி பெண்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாத நிலை உருவாகி விட்டது. அறுவடை காலங்களில் ஒரு பெண் சராசரியாக 10 மூடை நெல் [ கூலியாக ] அறுவடை செய்து விடுவதால், அடுத்த அறுவடை காலம் வரும் வரை குடும்பத்தின் அனைத்து செலவினங்களுக்கும் நெல்தான் மூலதனமாக பயன்படுத்தப்படுகின்றது. விவசாயத்தையே 100% நம்பியிருந்த பெண்கள், மாற்று வேலை வாய்ப்பை தேடி கோயமுத்தூர், திருப்பூர், தூத்துக்குடி, சென்னை போன்ற தொழில் நகரங்களுக்கு இடம் பெயர்ந்து செல்ல வேண்டிய தவிர்க்க முடியாத நிர்பந்தம் உருவாகி விட்டது.

அப்படி இடம்பெயர்ந்து செல்லும் பெண்கள் மற்றும் அவர்களை சார்ந்த குழந்தைகள் அங்கு சந்திக்கின்ற இன்னல்களோ ஏராளம், ஏராளம்.புதிய இடம், அறிமுகமில்லாத நப்ர்கள், தெரியாத வேலை இந்த சூழ்நிலையில் தங்குவதற்கு பாதுகாப்பான இடவசதி இல்லாதது, மூன்று வேளை சாப்பாட்டிற்கு திண்டாட்டம், குழந்தைகள் படிப்பை தொடர முடியாமல் பாதியில் விட்டுவிடும் அவலம், பெண்களுக்கு பாலியல் ரீதியான பிரச்சனைகள் ஆரோக்க்கியமான சூழல் இல்லாததால் உடல் நலக்குறைவு, கேட்பதற்கு ஆளில்லை என்னும் தைரியத்தில் ஆண்கள் தவறான வழிக்கு செல்லுதல், இதனால் கணவன், மனைவியை விட்டு பிரிந்து தனித்து வாழும் நிலை, தனது துன்பங்களையும், துயரங்களையும் சொல்லி அழ உற்றார் உறவினர் இல்லாமல் மன அழுத்தத்துடன் அனைத்து குடும்ப பாரத்தையும் சுமந்து வாழ வேண்டிய கட்டாயத்திற்குள் பெண்கள் தள்ளப்படுகின்றனர். இயந்திரமயமாக்குதலால் இந்தியாவின் நிலை உயர்ந்து விடுமா ? இன்னல்கள் பெருகுமா ? என் இனிய சகோதரிகளே நமக்குள்ள பெரிய சவால்கள். இணைந்து சாதிக்க இன்னும் முற்படுவோம் பொறுத்தது போதும்.

நட்புறவுடன்
பார்வதி